**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 06 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்படாததுடன் உரிமையும் மாற்றப்படாது இருந்தது. மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் கணக்கிற்கு உள்ளடக்கப்படாமையால் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் எல்லைகளிற்கு உட்பட்ட மயானங்களில் உள்ள கட்டிடங்களின் பெறுமதியானது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் கணக்குகளில் கட்டடத்தின் பெறுமதி குறைவாக காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 புத்தகங்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் பேணல்

சபையினால் கொடுப்பனவுப் பதிவேடு, காசோலைகாசுக் கடன் பதிவேடு, வாகன சம்பவக் குறிப்பேடு, கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு, பலவின கடன்கொடுத்தோர் பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான இணங்காமை

பின்வரும் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி நிருவாக) விதிகள் | |
| (i) அத்தியாயம் III விதி 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் வீதவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III விதி 33 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வரி மதிப்பீட்டு எழுதுநரால் வரி இறுக்கத் தவறுவோரின் பட்டியலொன்று தவிசாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் III விதி 66 | வருமான நிலுவை ரூபா 2,188,048 இனை சபையின் செயலாளரால் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் V விதி 120 | உரிய திகதிகளில் முற்பணங்கள் செலுத்தத் தவறும்போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் ரூபா 1,012,297 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | மாதத்திற்கான வாகன ஓட்டப் பதிவேடு தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி 2016 திசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 48,863,336 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 56,275,746 ஆக இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 7,412,410 ஆல் குறைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 4,319,523 விளைந்திருப்பதுடன், நேரொப்பான முன்னைய ஆண்டில் தேறிய மிகையாக ரூபா 6,558 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 4,312,965 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 196,103,440 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 180,432,230 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 15,671,210 ஆல் அதிகரித்துள்மையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான நிர்வாகம்

### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| இறைகளும் வரிகளும் | 670 | 141 | 2,188 |
| குத்தகை வாடகைகள் | 25,686 | 17,106 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,457 | 1,612 | |
| ஏனைய வருமானங்கள் | 93,912 | 87,662 | 81,730 |
| **மொத்தம்** | **121,725** | **106,521** | **83,918** |

### 2.4.2 ஆதனவரிகள்

மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 2,138,421 அறவிடப் பட்டிருக்கவில்லை.

### 2.4.3 முத்திரைக் கட்டணங்கள்

2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பெறப்படவேண்டிய முத்திரைக்கட்டணங்கள் ரூபா 97,559,923 பெறப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து பிக்கப் வாகனம் பழுதடைந்த நிலையில் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து மின் பிறப்பாக்கி பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தும் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 120 ஆகவும் உள்ளபடியான பதவியினர் 109 ஆகும். அதன்படி 11 பதவியணியினர் வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

(ஆ) சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வருடமொன்றிற்கு குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களே நடைபெற்றுள்ளது.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

3 மில்லியன் பெறுமதியான முதலைக்குழி குடிநீர் விநியோகத்திட்டவேலைகள் முடிக்கப்பட்டுள்ள போதும் நீர் வழங்கல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கழிவுப் பொருட்கள் தரம் பிரிக்காது ஒன்றாகவே குவிக்கப்படுகின்றது

**4. நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவின கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 128,152 தொடக்கம் ரூபா 9,151,531 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.